[1971 டிசம்பர் 17

திரு. காதர் பாட்சா என்ற வெள்ளைச்சாமி : இப்போது பட்டு நூல் விநியோகம் செய்கிற குழுவை மாற்றி அரசே பொறுப்பேற்றிருப்பதாகத் தெரிய வருகிறது. அந்தக் குழுவில் யார் யார் அங்கம் வகித்து வினியோகம் செய்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது வாலண்டரி ஆர்கனைசேஷன். அவர்களாகவே ரீஜினல் கமிட்டி என்று அமைத்து அதன்மூலம் கொடுத்து வந்தார்கள். அதிலே தவறு நடைபெறுகிறது என்ற புகார் வந்தது. அதன் காரணமாக நம்முடைய டைரக்டர் ஆஃப் ஹாண்ட்லூம்ஸ் அவர்களுக்கே பொறுப்பைத் தரவேண்டுமென்று மத்திய அரசுக்குத் தெரிவித்திருந்தோம். அந்தக் குழுவுக்கு டைரக்டர் ஆஃப் ஹாண்ட்லூம்ஸைத் தலைவராகப் போட்டு நடத்திப் பாருங்கள் என்று அவர்கள் சொன்னார்கள். இப்போது டைரக்டர் ஆஃப் ஹாண்ட்லூம்ஸ் இதன் தலைவராக இருக்கிறார்.

திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன் : செயற்கைப் பட்டு விநியோகம் செய்யும் ரீஜினல் கமிட்டியில் தொழிலாளர் பிரதிநிதிகள் இருக்கிறார்களா ? இல்லையென்றால் அதற்கு ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழிலாளர் பிரதிநிதிக்கும் இந்த முறைக்கும் சம்பந்தம் இல்லை. யார் யார் உண்மையாகப் பயன்படுத்துகிறார்களோ அவர்களுடைய பிரதிநிதிகள் இருக்க வேண்டுமென்ற முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய டைரக்டர் ஆப் ஹாண்ட்லூம்ஸ் அதன் தலைவராக இருக்கிறார்.

திரு. இ. எஸ். தியாகராசன் : கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்குத் தமிழ் நாடு நெசவாளர் சங்கம் மூலமாக இதை விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப் படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நாம் அந்த முறையைத்தான் கேட்டிருந்தோம். அவர்கள் அதை ஒத்துக் கொள்ளாத காரணத்தால் இந்தக் குழுவில் நம்முடைய டைரக்டர் இருக்கிறார் என்ற காரணத்தால், அவரே கூட்டுறவுத் துறையின் தலைவராகவும் இருக்கிற காரணத்தால் அந்தப் பயன் இயற்கையாகவே ஏற்பட்டுவிடும்.

ஈரோட்டிலுள்ள நூல் பண்படுத்தும் தொழிற்சாலை

* 524 வினா—திரு. மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஈரோட்டில் நடைபெறும் நூல் பண்படுத்தும் தொழிற்சாலையை விரிவு படுத்தும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம்.

திரு. மா. சுப்பிரமணியன் : யார்ன் பிராசசிங் சென்டரில் தினமும் எந்த அளவுக்குத் துணிகளைப் பிராசசிங் செய்கிறார்கள் ? என்னென்ன வகையில் பிராசசிங் செய்யப்படுகிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாதம் ஒன்றுக்கு 3 லட்சம் மீட்டர் பிராசசிங் செய்யப்பட்டு வந்ததை 12 லட்சம் அளவுக்கு உயர்த்தலாம் என்பது

1971 டிசம்பர் 17]

பற்றி இந்தத் துறை பரிசிலித்து வருகிறது. இதிலே புதிய ரகங்கள் இப்போது வெளியிடப்பட்டிருக்கின்றன. என்பது கனம் அங்கத்தினர் அவர்களுக்கே தெரியும்.

திரு. இ. எஸ். தியாகராசன் : தற்போது இந்தத் தொழிற்சாலை யார் நிர்வாகத்தில் இருக்கிறது? கடந்த ஆண்டு இதில் பெற்ற லாபம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : லாப நஷ்டக் கணக்கு விவரம் இல்லை. கனம் அங்கத்தினர்களுக்கே தெரிந்த செய்தி—இதை நடத்த வேண்டாம், ஏலத்தில் விட்டு விடலாம் என்ற முடிவை அன்றைய நிர்வாகம் அறிவித்தது. அதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. அரசாங்கத்தின் பொறுப்புக்கு வந்தவுடன் ஏற்று நல்ல முறையில் நடத்தப்பட்டு வருகிறது.

ஒண்டிப்புத்தூர் அருகே இரயில்வே மேம்பாலம்

* 525 வினு—திரு. ஏ. சுப்பிரமணியம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

கோவையையடுத்த ஒண்டிப்புதூரில், திருச்சி பாதையில் உள்ள இரயில்வே லெவல் கிராசிங்கில் மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

பாசன வசதிகள்

* 526 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குளித்தலை வட்டம், சிந்தலவாடி வடிகால் வாய்க்காலில் இருந்து குழாய் மூலம் தண்ணீர் எடுத்துச்சென்று ஆயக்கட்டில் சேராத நிலங்களுக்கு பம்புசெட்டு மூலம் பாசனத்திற்குப் பயன்படுத்தப்படுவது உண்மையா?

(இ) ஆம் எனில், எவ்வளவு ஏக்கர் நிலங்களுக்கு எந்த ஆண்டு முதல் இவ்வாறு பாய்ச்சப்படுகிறது?

(உ) இவைகளின் பேரில் தீர்வை ஏதேனும் வசூலிக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை. சிந்தலவாடி வடிகாலின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஆயக்கட்டு நிலங்கள் கிடையாது, ஆகவே ஆயக்கட்டில் சேராத நிலங்கள் பாசனம் செய்யப்படுகின்றனவா என்ற கேள்வி எழாது.

(இ) & (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

* 527 வினு—திரு. அ. சின்னசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செயங்கொண்டம் தொகுதியில் உள்ள தா—பழூர் ஒன்றியப் பகுதியில் நீர்ப்பாசன வசதியளிக்க மருதையாற்றுத் திட்டம் அரசாங்கத்தால் பரிசீலிக்கப்பட்டதா?